**வகுப்பு : 8-ம் வகுப்பு**

**பாடம் : தமிழ்**

## இயல் - 5

**I. சிறுவினா.**

**1. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?**

பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப்பாடல்களைப் பாடும்போது, அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆகிய புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும்.

கண்களுக்கு இனிய குளிர்ச்சி தரும் ஒளியை உடைய பொன்வண்ண நீர்நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த்திவலைகளை வாரி இறைக்கும்.

நிலத்தின்மீது நின்று கொண்டிருக்கும் மதயானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது எழும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாய் முழங்கும். இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் ஆகும்.

**2. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாய் நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.**

- வறியவர்களுக்கு உதவி செய்தல்,
- அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்,
- சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்,
- உறவினர்களோடு வெறுப்பின்றி அன்புடன் வாழ்தல்,
- அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்தல்,

- முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்,
- மறைபொருளைப் பிறர் அறியாமல் காத்தல்,
- குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்,
- தம்மை இகழ்வாரையும் பொறுத்தல்

ஆகியவை நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாய் நல்லந்துவனார் கூறுகிறார்.

**3. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.**

முதலில் பிரம்பு, நெருப்பில் காண்பிக்கப்பட்டுச் சூடுபடுத்தப்படுகிறது.

பின்னர், சூடான பிரம்பை, நட்டு வைத்திருக்கும் இருகடப்பாரைக் இடையே செலுத்தி வளைப்பர்.

அது வேண்டிய வடிவத்தில் கம்பி போல வளையும். பின்னர் அதனை தண்ணீரில் நனைத்து வைத்துவிட்டால் அப்படியே நிலைத்துவிடும்.

பிறகு, பிரம்புகளை இணைத்தும், சி0று ஆணிகளை அறைத்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கட்டியும் தேவையான பொருள்களாய் மாற்றப்படுகின்றன.

**4. மூங்கிலால் செய்யபப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.**

மூங்கிலைக்கொண்டு பல வகையான கைவினைப் பொருள்கள் செய்யப்படுகின்றன.

அவை மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைதட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான முஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில்,

புல்லாங்குழல், பட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய் என எத்தனையோ பொருள்கள் மூங்கில் மூலம் உருவாகின்றன.

சுருக்கமாய்ச் சொன்னால் பிறந்த குழந்தைக்கு விளையாட்டுப் பொருள் முதல் இறந்தவரை எடுத்துச்செல்லும் பிணக்கட்டில்வரை மூங்கிலால் செய்யப்படுகின்றன.

**5. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும். அவை, (1) வேற்றுமைத்தொகை (2) வினைத்தொகை (3) பண்புத்தொகை (4) உவமைத்தொகை (5) உம்மைத்தொகை (6) அன்மொழித்தொகை ஆகியன ஆகும்.

**6. இரவுபகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.**

இரவுபகல் என்பது உம்மைத்தொகை ஆகும். இத்தொடர் இரவும் பகலும் என விரித்து பொருள் தருகிறது. சொற்களின் இடையிலும் இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருள் தருவதால் உம்மைத்தொகை ஆகும்.

**7. அன்மொழித்தொகையை எடுத்துக்காட்டுன் விளக்குக.**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைகளை அடுத்து ஈற்றில் வேறு ஒருசொல் மறைந்து வருமாறு தொடர்வது அன்மொழித்தொகையாம்.

எந்தச் தொகையை அடுத்து வருகிறதோ அந்தத் தொகையால் அது பெயர் பெறும்.

பொற்றொடி - பொன்னால் ஆன வளையல் என்பது பொருள். அதனால் இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க

Pinkz Public School Next Generation School

தொகையாகும். இத்தொடர் 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால், 'பொன்னால் ஆன வளையலை அணிந்த பெண்' எனப் பொருள் தருகிறது. எனவே, இத்தொடர் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

**II. நெடுவினா.**

**1. தமிழகக் கைவினைக் கலைகளைப்பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**மண்பாண்டக்கலை:** தமிழகத்தின் பழமையான கைவினைத் கலைகளுள் ஒன்று மண்பாண்டக் கலையாகும். மண்பாண்டங்களில் சமைத்தால் உணவு நல்ல சுவையுடன் இருக்கும்; உடல்நலத்திற்கும் நல்லது. மண்பானையில் வைத்த தண்ணீர் குளிர்ச்சியாய் இருக்கும்.

**சுடுமண் சிற்பங்கள்:** மண்பாண்டக்கலையின் இன்னொரு வளர்ச்சி நிலைதான் சுடுமண் சிற்பக்கலை. மனித உருவங்கள் மட்டுமல்லாமல் விலங்குகள், பறவைகள், பொம்மைகள், அலங்கார வடிவங்கள் எனப் பல வகையான சிற்பங்கள் உள்ளன.

**மூங்கில்:** மூங்கிலைக்கொண்டு, பிறந்த குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்முதல் இறந்தவரை எடுத்துச் செல்லும் பிணக்கட்டில்வரை செய்யப்படுகின்றன.

**கோரைப்பாய்:** பாய் பின்னுவதும் சிறந்த கைவினைக் கலையாகும். முற்காலத்தில் பாய்மரக்கப்பல்களில் பயன்பட்டதுகூடப் பாய்தான்.

**பானையோலை:** ஓலைச்சுவடிகளைத் தயாரிக்கப் பனையோலை பயன்பட்டது. அதுமட்டுமின்றிக் குழந்தைகளுக்கான கிலுகிலுப்பை, பொம்மைகள், சிறிய பொருள்களை வைத்துக்கொள்ளப் பயன்படும் சிறிய கொட்டான், கூடை, களகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய் ஆகியவையும் செய்யப்படுகின்றன.

**பிரம்பு:** பிரம்பினால் குழந்தைகளுக்கான தொட்டில், கட்டில், ஊஞ்சல், நாற்காலி, மேசை, பூக்கூடை போன்றவை தயாரிக்கப்படுகின்றன. பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது. அதில் அமர்வதும் படுப்பதும் உடல் நலத்திற்கு நல்லதாகும்.

**III. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. **முழுவதும்** 2. **மட்டுமல்ல** 3. **அழகுக்காக** 4. **முன்பெல்லாம்**

1. கண்காட்சி அரங்கம் **முழுவதிலும்** கைவினைப்பொருள்கள் நிறைந்து காணப்பட்டன.
2. பனைமரம் கம்பீரமான தோற்றத்தில் **மட்டுமல்லாமல்** பயன் தருவதிலும்கூட மிகவும் உயர்வான மரந்தான்.
3. கலைப்பொருள்களை **அழகுக்காகப்** பல இடங்களில் பயன்படுத்துகின்றனர்.
4. **முன்பெல்லாம்** திருமணத்தின் போது துணிகள், பழங்கள், பலகாரங்கள் முதலியவற்றை வைத்துக் கொடுப்பதற்குச் சீர்க்கூடைகளைப் பயன்படுத்துவார்கள்.

Next Generation School

**IV. பின்வரும் இணைச்சொற்களை வகைப்படுத்துக.**

உற்றார் உறவினர், விருப்பு, காலைமாலை, கன்னங்கரேல், ஆடல்பாடல், வாடிவதங்கி, பட்டிதொட்டி, உள்ளும்புறமும், மேடுபள்ளம், நட்டநடுவில்.

| நேரிணை | எதிரிணை | செறியிணை |
|---|---|---|
| உற்றார் உறவினர் | விருப்பு வெறுப்பு | கன்னங்கரேல் |
| வாடிவதங்கி | காலை மாலை | நட்ட நடுவில் |
| ஆடல் பாடல் | உள்ளும் புறமும் | |
| பட்டிதொட்டி | மேடு பள்ளம் | |

**V. சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.**

**(மேடு பள்ளம், ஈடுஇணை, கல்விகேள்வி, போற்றிப்புகழப்பட, ஆடி அசைந்து)**

1. சான்றோர் எனப்படுபவர் ____________களில் சிறந்தவர் ஆவர்.

   **விடை: கல்விகேள்வி**

2. ஆற்று வெள்ளம் ____________ பாராமல் ஓடியது.

   **விடை: மேடுபள்ளம்**

3. இசைக்கலைஞர்கள் ____________ வேண்டியவர்கள்.

   **விடை: போற்றிப்புகழப்பட**

4. தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு ____________ இல்லை.

   **விடை: ஈடு இணை**

5. திருவிழாவில் யானை ____________ வந்தது.

   **விடை: ஆடி அசைந்து.**

Pinkz Public School
Next Generation School

**VI. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.**

1. இடி __________________ மழை வந்தது.

**விடை: இடியுடன் மழை வந்தது.**

2. மலர்விழி தேர்வின் __________________ ஆயத்தமானாள்.

**விடை: மலர்விழி தேர்விற்காக ஆயத்தமானாள்.**

3. அருவி மலையில் __________________ வீழ்ந்தது.

**விடை: அருவி மலையிலிருந்து வீழ்ந்தது.**

4. தமிழைக் __________________ சுவையான மொழியுண்டோ!

**விடை: தமிழைக்காட்டிலும் சுவையான மொழியுண்டோ!**

5. யாழ், தமிழர் __________________ இசைக்கருவிகளுள் ஒன்று.

**விடை: யாழ், தமிழருடைய இசைக்கருவிகளுள் ஒன்று.**

**VII. குறுக்கெழுத்துப் புதிர்.**

**இடமிருந்து வலம்**

1. முதற்கருவி எனப் பெயர் பெற்றது (மத்தளம்).

2. யாழிலிருந்து உருவான பிற்காலக் கருவி (வீணை).

7. இயற்கைக் கருவி (சங்கு).

12. விலங்கின் உறுப்பைப் பெயராய்க் கொண்ட கருவி (திமிலை).

**வலமிருந்து இடம்**

4. வட்டமான மணி போன்ற கருவி (சேகண்டி).

8. ஐந்து வாய்களைக் கொண்ட கருவி (குடமுழா).

9. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர் (பாணர்).

**கீழிலிருந்து மேல்**

8. மூங்கிலால் செய்யப்படும் காற்றுக்கருவி (குழல்).

10. வீணையில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கை (ஏழு).

11. திருமணத்தின் போது கொட்டும் முரசு (மணமுரசு).

**மேலிருந்து கீழ்**

1. 19 நரம்புகளைக் கொண்ட யாழ் (மகரயாழ்).

3. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை (கஞ்சக் கருவி).

5. சிறிய வகை உடுக்கை (குடுகுடுப்பை).

6. பறை ஒரு (தோல் கருவி).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | த் | த | ள | ம் | | 2 வீ | ணை |
| க | | | டி | ண் | 3 க | 4 சே | 5 கு |
| ர | 6 தோ | | | | ஞ் | | டு |
| யா | ல் | சு | | ல் | 7 ச | ங் | கு |
| ழ் | | ர | | ழ | | | டு |
| | ழா | மு | ட | 8 கு | | | ப் |
| ழு | | ண | | ர் | ண | 9 பா | பை |
| 10 ஏ | | 11 ம | | 12 தி | மி | லை | |

**கலைச்சொல் அறிவோம்**

| | | |
|---|---|---|
| கைவினை | - | Crafts |
| புல்லாங்குழல் | - | Flute |
| முரசு | - | Drum |
| கூடைமுடைதல் | - | Basketry |

| | | |
|---|---|---|
| பின்னுதல் | - | Knitting |
| கொம்பு | - | Horn |
| கைவினைஞர் | - | Artisan |
| சடங்கு | - | Rite |

Pinkz Public School
Next Generation School

## கடிதம்

**இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.**

**இருப்பிடச் சான்று வேண்டி விண்ணப்பம்**

**அனுப்புநர்**

கு. தமிழ்ச்செல்வன்,
த/பெ. குபேரன்,
45, வடக்கு ராஜ வீதி,
புதுக்கோட்டை.

**பெறுநர்:**

வட்டாட்சியர்,
வட்டாடசியர் அலுவலகம்,
புதுக்கோட்டை.

**ஐயா,**

**பொருள்:** இருப்பிடச் சான்று வேண்டுதல் தொடர்பாக.

நான் பள்ளியில் உயர்நிலை வகுப்பில் சேர்ந்து பயில இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகிறது. அதற்கு உரிய விண்ணப்பப்படிவத்தினை உரிய ஆவணங்களுடன் இத்துடன் இணைத்துள்ளேன்.

தாங்களும் எனக்கு விரைவில் இருப்பிடச்சான்றிதழ் வழங்கி உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

**நன்றி ,**

**இப்படிக்கு,**
**தங்கள் உண்மையுள்ள,**
**கு. தமிழ்ச்செல்வன்.**

**இடம்** : புதுக்கோட்டை
**தேதி** : 11.07.2019